[22nd October 1964

திரு. ம. கமலநாதன்: மிகப் பின் தங்கிய மாவட்டம் எனக் கருதி ஹோசூரில் ஒரு நூற்பு ஆலைக்கு லைசென்ஸ் கொடுத்து விட்டு, அவ்வாறு லைசென்ஸ் பெற்றவர்கள் அந்த ஆலையை ஆத்தூரில் அமைக்க எவ்வாறு அரசினர் சம்மதித்தார்கள்?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: ஆத்தூரும் பின் தங்கிய பகுதி என்று கனம் சட்ட மன்ற அங்கத்தினர்கள் நடவடிக்கை எடுத்த காரணத்தினால்தான்.

திரு. ர. ஜீவரத்தினம்: கூட்டுறவு நூற்பு ஆலை ஏற்படுத்த மத்திய பாங்க் பணம் கொடுக்கவில்லையென்றால் தனியாகப் பங்குத் தொகைகளை வசூலித்துக்கொள்ளவேண்டுமென்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவ்வாறு தனியாகப் பங்குத் தொகைகளை வசூலித்துக் கொள்ள முடியுமென்று நான் நம்புகிறேன். அவ்வாறு வசூலிக்கப்படும் பங்குத் தொகைகளுக்கு டிவிடெண்டு ஒரு வரையறைக்கு உட்பட்டிருக்கிறது. அந்த டிவிடெண்டை உயர்த்திக் கொடுக்க அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இப்போது இருக்கின்ற விதிகளின்படி பங்குத் தொகைகளை வசூலிக்கவேண்டும்.

திரு. டி. கார்ச்சா கவுடர்: கோவை மத்திய சிறையிலுள்ள நூற்பு ஆலை பழமையான மெஷினரிகளைக் கொண்டு இயங்கி வருகிறது. அவற்றைப் புதுப்பித்து நவீன மெஷினரிகளை அமைக்க ஏதாவது திட்டம் இருக்கிறதா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அந்த விதமான யோசனை சர்க்காரிடத்தில் இருக்கிறது.

திரு. ஏ. ஆறுமுகம்: வட ஆற்காடு தென்பகுதியில் இத்தகைய நூற்பு ஆலை ஒன்றைத் தனியார் துறையில் அமைக்க ஆக்கமும் ஊக்கமும் தருவார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு வேண்டிய கதிர்கள் கொடுத்தாகிவிட்டன. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு இப்போதே தயாராக வேண்டும்

புலவர் கா. கோவிந்தன்: கூட்டுறவு நூற்பு ஆலைக்கு எவ்வளவு பங்குப் பணம் வசூலிக்கப்பட்டிருக்கிறது? இன்னும் எவ்வளவு வசூலிக்க வேண்டும்?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: தனியாகக் கேள்வி கேட்டால் பதில் சொல்கிறேன்.

தமிழ்நாடு வீட்டுவசதி போர்டு

*56 **கேள்வி.—திரு. இராம. அரங்கண்ணல்:** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் (போர்டின்) கணக்குகளைப் பரிசீலனை செய்ய அரசாங்கம் தணிக்கையாளர் ஒருவரை நியமித்திருக்கிறதா?

(இ) ஆம் எனில், மேற்படி வாரியத்தின் தணிக்கை அறிக்கையும் கணக்குகளும் அரசாங்கத்துக்குக் கிடைத்தனவா ?

(உ) 1961 முதல் 1963 வரையுள்ள ஆண்டுகளுக்கு மேற்படி வாரியத்தின் நிர்வாக அறிக்கைகள் அரசாங்கத்துக்குக் கிடைத்தனவா ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*), (*b*) & (*c*) Yes, Sir.

வண்டிச்சீட்டுகள் (முத்திரையிடுதல்)

*57 கேள்வி.—திரு. சா. ராமசாமி: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தனியார் நடத்தும் பஸ்களில் சரியான கணக்கு முறையை அமுலாக்கும் பொருட்டு டிக்கட்டுகளை அரசினர் சோதித்து முத்திரையிட்டுக் கொடுக்கும் முறையைக் கையாளும் உத்தேசமுண்டா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இல்லை.

திரு. சா. ராமசாமி : தனியார் நடத்தும் பஸ்களில் பல இடங்களில் அதிகப்படியான டிக்கட்டுகளை எடுத்துக் கொள்வதும், இரண்டு முறை கொடுக்கும் பழக்கமும் இருந்து வருகிறது. இந்த முறையை ஒழிக்க என்ன வழிவகைகளை அரசாங்கம் மேற்கொண்டிருக்கிறது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதற்காக இன்ஸ்பெக்ஷன் செய்வது, Motor Vehicle Inspector மூலமும், ஆங்காங்கு போலீஸ் மூலமும் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

திரு. து. ப. அழகமுத்து : இப்படி ஒரு முறையைக் கையாள்வதன் காரணமாக சர்க்காருக்குக் கூடுதலான வருமானம் கிடைக்குமென்ற நிலை இருப்பதால் சர்சார்ஜை கம்பவுண்டு செய்வதற்குப் பதிலாக எண்டெர்டெய்ன்மெண்ட் டாக்சுக்காக புத்தகங்களில் சீல் போடுவதைப் போன்ற முறையை இதற்கும் அனுசரிக்க அரசாங்கம் முன் வருமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்த முறையைப்பற்றிப் பரிசீலனை செய்து அதிலே பலவிதமான கஷ்டங்கள், சிக்கல்கள் இருந்த காரணத்தால்தான் கைவிடப்பட்டது. பலவிதமான டிக்கட்டுகள் இருக்கின்றன. இடையிலே ஒரு ஊரிலிருந்து இன்னொரு ஊருக்குப் போகும்போது மூன்று நான்கு ஸ்டேஜ்கள் இருக்கின்றன. ஸ்டேஜுக்குத் தகுந்தபடி டிக்கட்டுகள் ஏற்பாடு செய்ய வேண்டும். பரீட்சார்த்தமாக எக்ஸ்பிரஸ் பஸ்ஸில் ப்ரின்டெட் டிக்கட் கொண்டு வரவேண்டுமென்ற விதியைக் கொண்டு வருகிறோம்.